வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 12.07.2025 சனிக்கிழமை | இதழ் : 193 | பக்கங்கள் : 12

# செம்மணி புதைகுழி விசாரணையில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியமானது

## தமிழரசுக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

**செம்மணி மனிதப் புதைகுழி விசாரணையில் உண்மையைக் கண்டறிதல், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நீதி ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தி இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.**

அந்தக் கடிதம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ சுமந்திரன் ஆகியோரால் கையொப்பமிட்டு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

செம்மணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதைகுழி அகழ்வுப் பணி குறித்து ஆழ்ந்த கவலையை தெரிவித்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பாக நாங்கள் எழுதுகிறோம். உண்மையை வெளிக்கொணரவும், தடயவியல் நெறிமுறைகள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களை பூர்த்தி செய்வதை உறுதி செய்யவும், குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவும் அவசர மற்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

1998 ஆம் ஆண்டில், பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசாமி மற்றும் குடும்ப உறுப்பினர்களை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததற்காக தண்டனை பெற்ற

11

## உயர்தர பரீட்சை நவ.10 ஆரம்பம்



கொழும்பு, ஜூலை 12

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். (அ)

# வடக்கு-கிழக்கில் படைகள் ஆக்கிரமித்த காணிகள் விடுவிக்கப்படுதல் கட்டாயம்!

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பிலும், இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இலங்கை விஜயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயமும் சேர்க்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஊடகமொன்றுக்கு கருத்துரைத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அலுவலகத்தின் உறுப்பினரான ஜேர்மி லோரன்ஸ் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க், தமது இலங்கை விஜயத்தின் போது வடக்கு - கிழக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதாக ஜேர்மி லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

11

## வேம்படி மகளிர் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

2024 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று அதிகாலை வெளியாகின. வெளியாகிய பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முதலிடத்தை பிடித்துள்ளது. அந்தப் பாடசாலையில் இருந்து 120 மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில், குறித்த பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய 265 மாணவர்களுள் 181 மாணவர்கள் அதி சிறந்த சித்திகளைப் பெற்றுள்ளனர்.

11

## வடக்கு கடைசி நிலையில்!

கொழும்பு, ஜூலை 12

வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் 69.86 வீத சித்தியைப் பெற்று இறுதி நிலையைப் பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தநிலையில் 2024 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, 2 இலட்சத்து 37 ஆயிரத்து 26 மாணவர்கள் உயர்தரக் கல்விக்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்தார்.

இது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின்

11

## போர்க் காலத்தில் புலிகளே பொதுமக்களை கொன்றனர்

### படையினர் அவ்வாறு செய்யவில்லை என்று கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜூலை 12

"போர்காலத்தில் புலிகளே பெருமளவிலான தமிழ் மக்களை கொலை செய்தனர். இராணுவத்தினர் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவில்லை." என்று மொட்டு கட்சி செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

11

## முன்னாள் அமைச்சர் ராஜிதவை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஜூலை 12

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனுவெல நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சமர்ப்பித்த கோரிக்கையை ஆராய்ந்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

11

## அமெரிக்காவின் வரி குறித்து கலந்துரையாடல் தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 12

அமெரிக்க வரி விடயத்தில் தொடர்ந்து இருதரப்பு கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்ற நிலையில் மேலும் வரித்தொகையை குறைப்பதற்கே எதிர்பார்த்துள்ளதாக தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் நேற்று கூடியது. இதன் எதிர்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலகவினால் அமெரிக்காவின் தீர்வை வரி விடயத்தில்

11

# சர்வதேச நீதி பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு - கிழக்கில் 26ஆம் திகதி போராட்டம்!

## வடக்கு - கிழக்கு சமூக இயக்கம் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி பாரிய மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள அனைவரையும் ஒன்றிணையுமாறு வடக்கு கிழக்கு சமூக இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, பாதிக்கப்பட்ட உறவுகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புக்கள, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஊடகவியலாளர்கள் என அனைவருக்கும் விடுத்துள்ளார்.

இவ்வழைப்பில் , இலங்கையில் மனித குலத்திற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செம்மணி மனிதப் புதைகுழியில்

# பொலித்தீன் பைக்குள் சுற்றப்பட்ட எலும்புகள்!

யாழ்ப்பாணம் , ஜூலை 12

செம்மணி மனித புதைகுழி வளாகத்தின் அகழ்வாய்வுத் தளத்தின் இரண்டாவது பகுதியில் பொலித்தீனால் சுற்றப்பட்ட மனித எலும்புகளின் ஒரு குவியல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியில் 2025 மே மாத நடுப்பகுதியில் இருந்து ஜூலை 10ஆம் திகதி வரை அகழந்து எடுக்கப்பட்ட (சிறுவர்கள் உட்பட) மொத்த மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 65 ஆகும்.

இரண்டாம் கட்ட அகழ்வாய்வு 15 நாட்கள் இடம்பெற்ற பின்னர், அகழ்வாராய்ச்சி குழுவினருக்கு ஓய்வு அளிக்கும் வகையில் நேற்று முன் தினம் அகழ்வாராய்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

பொலித்தீனில் கட்டப்பட்ட எலும்புகள் அடங்கிய குவியல் தொடர்பில் ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிகள் குழுவுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவினால் உத்தரவிடப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா குறிப்பிட்டார்.

"அகழ்வுப்பணி பிரதேசம் இரண்டில் ஒரு பொலித்தீனினால் கட்டப்பட்ட எலும்புக் குவியல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த தொகுதியில் சிறிய மற்றும் பெரிய எலும்பு துண்டுகள் காணப்பட்டதால், அந்த எலும்புகள் குறித்து ஆய்வு குறித்த அறிக்கை ஒன்று நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் தலைமையில் சட்ட வைத்திய அதிகாரிகள் குழு ஒன்றை உருவாக்கி, எடுக்கப்பட்ட அந்த எலும்புகளை ஆராய்ந்து ஆகக் குறைந்த மனித உடல்களின் எண்ணிக்கை தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் அறிவித்தார்.

இதுவரை, செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வளாகத்தில் மூன்று இடங்களில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, மேலும் அந்த இடங்கள் தடயவியல் அகழ்வாய்வுத்தளம் 1, 2 மற்றும் 3 என பெயரிடப்பட்டுள்ளன.

மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வு குறித்த அறிக்கையை ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டதாக, பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

நீதி அமைச்சு 45 நாட்களுக்கு அகழ்வாய்வுக்குத் பணிக்காக கோரப்பட்ட முழுத் தொகையையும் வழங்கியுள்ளதாக ஊடகங்களுக்குத் தெரிவித்த சட்டத்தரணி ரணிதா, அந்தத் தொகையை வெளியிடவில்லை. (அ)



## வவுனியாவில் வீதியோரத்தில் குப்பைகளை கொட்டும் நபர்கள்

வவுனியா, ஜூலை 12

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்திற்கு அருகேயுள்ள காட்டுப்பகுதியில் தினசரி பலர் குப்பைகளை வீசி வருவதால் அவ்விடத்தின் சுற்றுப்புறச்சூழல் மாசடைந்து காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன் தினம் அவ்விடத்தில் பட்டாரக வாகனத்தில் வருகை தந்த நபரொருவர் வாகனத்திலிருந்த குப்பைகளை குறித்த வீதியில் வீசியுள்ளார்.

இதனை அவ்வீதியுடாக சென்ற இளைஞர்கள் அவதானித்து குறித்த நபருக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் வீசிய குப்பைகளை மீள எடுத்துச் செல்லுமாறு பணித்து அவர் குப்பைகளை எடுத்துச்செல்லும் வரை அவ்விடத்தில் நின்றனர்.

எனவே குறித்த பகுதியில் வீதியோரமாக குப்பைகள் வீசப்படுவதை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினர் கட்டுப்படுத்தவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## கிளிநொச்சியில் நேற்று வயல் விழா

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி மாகாணத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் நேற்று வயல் விழா நடைபெற்றது.

விவசாயிகளிடத்தில் நவீன விவசாய தொழில்நுட்பங்களை வழங்கி நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் கால நிலைக்கு சீரமைவான விவசாயத்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய நாற்று நடும் இயந்திரம் மூலம் ஏ.ரி.362 நெல் வர்க்கம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் நேற்று அறுவடை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த அறுவடை விழா கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் நேற்று காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி. சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கால நிலைக்கு சீரமைவான விவசாயத் திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, வடமாகாண விவசாய மேலதிக பணிப்பாளர் த. யோகேஸ்வரன்,

காலநிலைக்கு சீரமைவான விவசாயத் திட்டத்தின் வடமாகாண பணிப்பாளர் பாபு, யாழ் பல்கலைக்கழக விவசாய பீட பண்ணை முகாமையாளர்,

விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கால நிலைக்கு சீரமைவான விவசாயத்திட்டத்தின் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்பு பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## யாழ். மத்திய கல்லூரியில் இரு மாணவர்களுக்கு 9 ஏ

யாழ்ப்பாணம், ஜூலை 12

2024 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று அதிகாலை வெளியாகின.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்கள் இருவர் 9 ஏ சித்திகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அபிசாந்த் திஷான் மற்றும் எல்.விமலக்சன் ஆகிய இரு மாண வர்களே 9 ஏ சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதேவேளை, கே.தனுசியன், ஆர்.நிலவன், சி.நெடுமாறன், எஸ்.பவித்ரன், எஸ். ஜபேஷ் மற்றும் கே.பிரம்ஷாந்த் ஆகியோர் 8 ஏ சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (அ)

## சாய்ந்து விழும் நிலையில் மின் கம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஏ-9 வீதியின் ஆனையிறவு உப்பளத்தின் முன் பக்கமுள்ள இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின்கம்பம் சாய்ந்து விழும் அபாயத்தில் உள்ளது.

குறித்த மின் கம்பம் இரு புறமும் உள்ள மின் கம்பத்தின் இணைப்புக் கம்பியில் தொங்கிய நிலையில் கீழே விழாது காணப்படுகிறது.

தற்போது வீசிவரும் காற்றின் தாக்கத்தினால் நிலத்தில் வீழ்ந்து விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை உள்ளது.



இது தொடர்பாக இலங்கை மின்சார சபை உடனடி கவனத்தில் கொண்டு விபத்து ஏற்படாமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## முல்லைத்தீவில் யானையின் தாக்குதலில் வீடு கடும் சேதம்

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட பெரிய சாளம்பன் கிராமத்தில் வாழ்ந்து வரும் வயோதிப குடும்பம் ஒன்றின் தற்காலிக வீட்டை யானையொன்று உடைத்து சேதப்படுத்தி யுள்ளது.

ஒட்டுசுட்டான் பெரிய சாளம்பன் பகுதியில் வீட்டுத்திட்டம் கிடைத்தும் முழுமை பெறாத நிலையில் தற்காலிக வீட்டில் வசித்து வந்த வயோதிப குடும்பம் நேற்று முன் தினம் இரவு ஒட்டுசுட்டான் சிவன் கோவில் திருவிழாவுக்கு சென்றுள் ளது.

இந்த நிலையில் இரவு வேளை கொம்பன் யானை ஒன்று காணிக்குள் வந்து தற்காலிக வீட்டை உடைத்து தள்ளியதுடன் வீட்டில் இருந்த நெல் மூடைகளை சேதப்படுத்தி உணவாக உட்கொண்டுள்ளது.

இதனால் பெரும் இடர்களை தாம் சந்தித்துள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளார்கள்.

குறித்த யானையை கிராம இளைஞர்கள் கலைக்க முற்பட்டபோது அது இளைஞர்களை துரத்த முற்பட்டுள்ளது. பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே இளைஞர்கள் யானையை விரட்டியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கிராம சேவையாளர், வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர்கள் வந்து பார்வையிட்டு விவரங்களை திரட்டியுள்ளார்கள் எனவும் வீட்டில் இருந்த உணவுப் பொருட்கள் யானையின் தாக்குதலில் சேதமடைந்துள்ளதுடன் அழிவடைந்தும் உள்ளன எனவும் கூறப்பட்டது. (அ)

## மரண அறிவித்தல்



We are saddened to share the passing of

**Dr. Maheswari Thiagarajah**

She passed away peacefully on July 9, 2025 at the age of 98

The funeral will be held on Sunday, July 13

At Chapel Ridge Funeral Home and Cremation Centre

8911 Woodbine Ave, Markham, ON, L3T 5G1

**VIEWING: 12:00 – 3:00 PM**

**HINDU FUNERAL RITES: 3:00 – 4:30 PM**

She will remain in our hearts forever.

Murali – Sundari – Lakshmi – Saras

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.07.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மக்களை ஏமாற்றாதீர்கள்

உள்ளூராட்சி சபைகளின் முதல் இரண்டு வருடங்களுக்கான ஆட்சியை கைப்பற்றுவதில் முட்டி மோதிக் கொண்ட கட்சிகள், சபைகளை வினைத்திறனாக நிர்வகிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுமா அல்லது முன்னரைப் போல் சபைகளின் எல்லைக்கு அப்பால்பட்ட அல்லது சபைகளின் பங்களிப்பின் எல்லையை புரிந்து கொள்ளாமல் தவறு செய்யுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. சாவகச்சேரி பிரதேச சபையின் முதலாவது அமர்வில் 'அணையா விளக்கு' போராட்டத்தின் ஆறு அம்ச கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பதை நோக்கும் போது உள்ளூராட்சி சபைகள் உருப்படியாக நிர்வகிப்படப் போவதில்லை என்பதே தெரிகின்றது.

உள்ளூராட்சி சபைகளில் போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் பேசுவதானது வாக்களித்த மக்களை அடி முட்டாளாக்கும் செயலாகும். சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தபோது இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றினார். ஆனால், அவரை முதலமைச்சர் வேட்பாளராக கொண்டுவரும் போது, சம்பந்தன் கூறியதோ வேறு - அதாவது, உலக வங்கியோடு பேசுவதற்கும் சர்வதேச நாணய நிதியத்தோடு பேசுவதற்குமான ஒருவரையே நாங்கள் முதலமைச்சர் வேட்பாளராக கொண்டு வருகின்றோம் - ஆனால், நடந்ததோ வேறு. வடக்கு மாகாண சபையின் ஊடாக எதையெல்லாம் செய்ய வேண்டுமோ - அவற்றை செய்வதை விடுத்து, இனப்படுகொலை தீர்மானத்தை விக்னேஸ்வரன் கொண்டு வந்தார்.

கேள்வி - அந்தத் தீர்மானத்தினால் ஏற்பட்ட விளைவு என்ன? அது தொடர்பில் விக்னேஸ்வரனால் மக்களுக்கு பொறுப்புக் கூற முடியுமா? இனப்படுகொலை தொடர்பில் பேசி விக்னேஸ்வரன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து மகாண சபைக்கான நிபுணர் குழுவை உருவாக்கும் பரிந்துரையை முன்வைத்தார் - இதிலிருந்து என்ன தெரிகின்றது? இனப்படுகொலை தீர்மானம் தொடர்பில் தெளிவான புரிதலோடு விக்னேஸ்வரன் செயல்பட்டிருக்கவில்லை. மாறாக, யாரையோ திருப்திப்படுத்துவதற்காக தனக்கு வாக்களித்த மக்களை தவறான வழிநடத்த முயற்சித்திருக்கின்றார்.

உண்மையில் இவ்வாறான தீர்மானங்களால் முன்னேற்றங்கள் இருப்பது உண்மையானால் கடந்த பதினாறு வருடங்களாக ஏன் பொறுப்புக் கூறல் விடயத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை? ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் எதற்காக அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட வேண்டும் என்று கூறிச் சென்றிருக்கின்றார். அத்துடன் உள்நாட்டு பொறிமுறையை வேறு வலியுறுத்தியிருக்கின்றார்? உள்நாட்டு பொறிமுறையின் மூலம் இனப்படுகொலைக்கான விசாரணை இடம்பெற்ற வரலாறுண்டா?

மாகாண சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தையே எவரும் பொருட்படுத்தவில்லை என்னும் போது உள்ளூராட்சி சபையொன்றில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் பெறுமதி என்ன?

அடிப்படையில் இவ்வாறான தீர்மானங்களால் எந்தவொரு பெறுமதியும் இல்லை என்பதையே இதுவரையான அனுபவங்கள் நிரூபித்திருக்கின்றன - இதுவரையில் சர்வதேச அரங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே புஸ்வாணமாகியிருக்கின்ற போது உள்ளூராட்சி சபைகளில் போர்க் குற்றம், இனப்படுகொலை தொடர்பில் பேசுவதானது ஒரு பொறுப்பற்ற செயலாகவே இருக்க முடியும்.

## யாழ். பஸ் நிலையப் பகுதிகளில் உள்ள பிரச்னைகள் குறித்து முதல்வர் ஆராய்வு


*யாழ்ப்பாணம், ஜூலை 12*

யாழ்ப்பாணம் மாநகரத்தின் மத்தியில் பொது மக்கள் அதிகம் வந்து செல்லும் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் திடீர் கள விஜயம் ஒன்றை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்த ராசா மேற்கொண்டார்.

மேற்படி விஜயத்தில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம், பஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள கடைகள், வீதியோரப் பழங்கள் விற்பனை ஊடாக போக்குவரத்து செய்ய முடியாமல் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆராய்ந்து நடைபாதையில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த விற்பனைப் பொருட்களை அப்புறப்படுத்துமாறு கடை நடத்துநர்களுக்கு முதல்வரால் அறிவுறுத்தப்பட்டது.

முதல்வரின் அறிவுறுத்தலை மீறி தொடர்ந்தும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடைபாதையில் விற்பனைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுமாக இருந்தால் மாநகர வருமான வரிப் பரிசோதகர்களினால் முன்னறிவித்தல் இன்றி பொருட்கள் மாநகர வாகனங்களை கொண்டு வந்து அகற்றப்படும் என்றும் வியாபாரிகளுக்கு தெளிவுபடுத்தப் பட்டது.

முதல்வரின் மேற்படி விஜயத்தில் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர பொதுச் சுகாதார பொறியியற் பிரிவு அதிகாரிகள், மாநகர பிரதான வருமான



வரி பரிசோதகர் உள்ளிட்ட பலர் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## மயிலிட்டியில் 35 வருடங்களுக்கு பின்னர் தேரில் ஆரோகணித்த கண்ணகி அம்பாள்



*யாழ்ப்பாணம்,ஜூலை 12*

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகி அம்பாள் ஆலய தேர் திருவிழா 35 ஆண்டுகளின் பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கண்ணகி அம்மன் ஆலய வருடாந்திர அலங்கார உற்சவம் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 14ஆம் நாளா நேற்று முன் தினம் தேர்த்திருவிழா இடம்பெற்றது


கடந்த 1990ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக மயிலிட்டி பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அக்கால பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து ஆலயம் சேதமடைந்ததுடன், ஆலயத்தின் சித்திர தேரும் முற்றாக அழிக்கப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் பல்வேறு போராட்டங்களை தொடர்ந்து மயிலிட்டிப் பகுதியில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, ஆலயத்தை மக்கள் தமது நிதி பங்களிப்பில் புனரமைத்தனர்.

அதனை அடுத்து, மக்களின் நிதி பங்களிப்பில் ஆலயத்திற்காக சித்திர தேர் உருவாக்கப்பட்டு, கடந்த 07ஆம் திகதி சித்திர தேர் வெள்ளோட்டம் இடம் பெற்று, நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்ணகி அம்பாள் புதிய சித்திர தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட் காட்சியளித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 12 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 28
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவிதியை




**மேடம்** கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**இடபம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னைவந்து நீங்கும்.

**மிதுனம்** பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். தவியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்** அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**சிம்மம்** உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி** திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்** உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு.வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**விருச்சிகம்** குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவுபிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**தனுசு** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டும்.

**மகரம்** எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மீனம்** உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

# செம்மணியில் புத்தகப் பை, பொம்மையோடு மீட்கப்பட்ட எலும்புக்கூடு குறித்து ஆய்வறிக்கை

*யாழ்ப்பாணம், ஜூலை 12*

யாழ்ப்பாணம்-செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நீல நிறப் பாடசாலைப் புத்தகப் பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றோடு அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவால் உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் யாழ். நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் இடம்பெற்றிருந்தன.

சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகியிருந்தனர். நேற்றைய தினம் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப் பாடசாலைப் புத்தகப் பையோடு, சிறுவரினுடையது எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டிருந்தது. அந்த என்புத் தொகுதிக்கு அருகில் சிறுவர்கள் விளையாடும் பொம்மை, ஆடை, சிறுமிகள் பயன்படுத்தும் காலணி, சிறு கண்ணாடி வளையல்கள் என்பனவும் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தன.

மீட்கப்பட்ட எலும்பு கூட்டு தொகுதிகள் அனைத்தும் சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட, பை, காலணிகள், கண்ணாடி வளையல்கள், ஆடையை ஒத்த துணிகள், பொம்மை உள்ளிட்ட பொருட்கள் சான்று பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு, நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அந்த மனித என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் 34 மாணவர்கள் 9 பாடங்களில் ஏ சித்தி

*வவுனியா, ஜூலை 12*

வெளிவந்த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் 34 மாணவர்கள் 9 பாடங்களில் ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

தமிழ் மொழி மூலம் 23 மாணவர்களும் ஆங்கில மொழி மூலம் 11 மாணவர்களுமாக 34 மாணவர்கள் 9 பாடங்களில் ஏ தர சித்தியை பெற்றுள்ளதுடன், 17 மாணவர்கள் தமிழ் மொழி மூலமாகவும் 3 மாணவர்கள் ஆங்கில மொழி மூலமாகவும் 8 பாடங்களில் ஏ தர சித்தியை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

(அ)

# கடல் மார்க்கமாக இந்தியா சென்றவர் தனுஷ்கோடி மணல் திட்டிலிருந்து மீட்பு

*சென்னை, ஜூலை 12*

இந்தியாவின், தனுஷ்கோடி அடுத்த மூன்றாம் மணல் திட்டில் தவித்த தமிழகத்துக்கு அகதியாக சென்ற இலங்கைத் தமிழர் ஒருவரை இந்திய கடலோர காவல் படையினர் மீட்டு மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தனுஷ்கோடி கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் நடுக்கடலில் மூன்றாம் மணல் திட்டில் இலங்கை தமிழர் ஒருவர் நிற்பதாக இந்திய கடலோர காவல் படையினருக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து இந்திய கடலோர காவல் படை முகாமுக்கு சொந்தமான ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பலில் தனுஷ்கோடி அடுத்த மூன்றாம் மணல் திட்டிற்கு சென்ற இந்திய கடலோர காவல் படையினர் அங்கு மீனவர்கள் கொடுத்த தகவலுக்கு அமைய நின்று கொண்டிருந்த இலங்கை தமிழரை பத்திரமாக மீட்டு தனுஷ்கோடி அடுத்த அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்து வந்து இலங்கை தமிழரை ராமேஸ்வரம் மரைன் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்ட இலங்கை தமிழரை மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த கியோசன் (வயது-28) என தெரியவந்தது.

கடந்த 1990 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு அகதிகளாக சென்ற கியோசனின் பெற்றோர் வேலூர் அணைக்கட்டு முகாமில் தங்கியிருந்த நிலையில் 1997 ஆம் ஆண்டு கியோசன் தமிழகத்தில் பிறந்துள்ளார்.

பின்னர் 2012 ஆம் ஆண்டு கியோசன் அக்காவின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் இலங்கை சென்று மீண்டும் தமிழகம் வந்து தங்கி இருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் மட்டக்களப்பில் தனது அப்பாவுக்கு சொந்தமான நிலங்களை விற்பனை செய்வதற்காக விமானம் மூலம் இலங்கை சென்றுள்ளார்.

நிலங்களை விற்று விட்டு மீண்டும் விமானம் மூலம் தமிழகத்திற்கு திரும்பி வர விஸா கிடைக்காததால் கியோசன் சட்டவிரோதமாக படகு மூலம் தமிழகம் வருவதற்காக புதன் கிழமை இரவு மன்னார் கடற்கரையில் இருந்து ரூ.50 ஆயிரம் கொடுத்து படகொன்றில் புறப்பட்டு நள்ளிரவு தனுஷ்கோடி மூன்றாம் மணல் திட்டில் வந்து இறங்கி உள்ளமை தெரிய வந்துள்ளது. (அ)

# வல்வெட்டித்துறை இரத்த தான சங்கத்தின் ஏற்பாட்டில் அமுத விழா இரத்ததான முகாம்

*யாழ்ப்பாணம், ஜூலை 12*


வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்கம், வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தின் ஏற்பாட்டில் 80ஆவது அமுத விழா இரத்ததானமுகாம் நாளை 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெடியகாடுகணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வுக்கு 21 நண்பர்கள் வல்லை 1977 இலண்டன் நண்பிகள் குழுவினர் அனுசரணை வழங்குகின்றார்கள். இரத்ததானம் செய்வோருக்கு கற்றல் உபகரணங்களுடன் அன்பளிப்புக்களும் வழங்கப்படவுள்ளன. (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கத்தில் இருந்தவரின்மீது களுத்துறையில் துப்பாக்கிச்சூடு

## பாதாள குழு மோதலே காரணமாம்



கொழும்பு, ஜூலை 12

**உறக்கத்திலிருந்தவர்மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில், ஒருவர் படுகாயமடைந்தார். பாதாள உலகக் குழுவினரிடையேயான மோதலே இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்குக் காரணம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.**

களுத்துறை - பாணந்துறை - ஹிரண - மாலமுல்லை பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்மீது அடையாளம் தெரியாத நபர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 32 வயது நபரே படுகாயமடைந்தார்.

அவர் பாணந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணமோ அல்லது சந்தேக நபர் பற்றிய தகவலோ வெளியாகவில்லை. இந்நிலையில், சந்தேக நபரைக் கைது செய்ய மூன்று பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை தொடங்கியுள்ளன.

குடு சலிந்து என்று கூறப்படுபவருக்கும் நிலங்கவுக்கும் இடையிலான மோதலே இந்த துப்பாக்கிச்சூட்டுக்குக் காரணம் என்றும் இதில், குடு சலிந்துவின் தரப்பை சேர்ந்தவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ஐ)

# தகவலறியும் உரிமை குழு தலைமை பதவி வெற்றிடம்!

## ட்ரான்ஸ்பரன்ஸி அமைப்பு கவலை

கொழும்பு, ஜூலை 12

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைமை பதவி கடந்த மார்ச் மாதத்துடன் வெற்றிடமானது. இதற்கு, தற்போது வரை புதிய தலைவர் நியமிக்கப்படாதமை குறித்து இலங்கை வெளிப்படை தன்மைக்கான சர்வதேச அமைப்பு (ட்ரான்பேரன்ஸி இன்ரர்நஷனல் சிறீ லங்கா (TISL) தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,தகவலறியும் உரிமை சட்டத்தின்படி ஆணைக்குழு 5 உறுப்பினர்களை கொண்டிருப்பதுடன் ஒரு தலைவர் அவசியமானவர். தற்போதைய நிலவரப்படி, ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதியரசர் டி. என். சமரகோன் (2025 மே மாதத்தில் நியமிக்கப் பட்டவர்), சட்டத்தரணி கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தன, சட்டத்தரணி ஜகத் லியனாரச்சி மற்றும் ஏ.எம். நஹியா ஆகிய நால்வர் மட்டுமே செயலில் உள்ளனர். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அப யரத்ன பதவி விலகியதிலிருந்து, தலைமைப் பொறுப்பு வெற்றி டமாகவே உள்ளது.

இந்த நியமன தாமதம் சட்ட பூர்வ நடவடிக்கைகளையும் மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதியாக பாதுகாப்பதிலும் இடையூறாக உள்ளது. இது போல வேண்டாமை தாமதங்கள் அரசியல் தலையீடுகளுக்கே வழிவகுக்கும் என்ற பொது நம்பிக்கையை உருவாக்குகிறது.

தகவலறியும் உரிமை என்பது, இலங்கையில் ஜனநாயகத்தின் முக்கியமான ஒரு தூணாகவே இருக்கிறது. அதன் நடைமுறைப்படுத்தலை நிலைத்த மற்றும் துல்லியமான முறையில் மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். இதற்கிணங்க, ஜனாதிபதியும் அரசமைப்பு பேரவையும், தலைமை பதவிக்கு உரிய நபரை விரைந்து, தகுதி மற்றும் நேர்மையுடன் நியமிக்க வேண்டும். இது ஊழல் எதிர்ப்பு போராட்டத்துக்கும் மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்றுள்ளது.

# ஓட்டோ விபத்தில் இருவர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 12

லொறியின் பின்புறமாக முச்சக்கர வண்டி மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

கண்டி- ஹேவாஹெட்ட பிரதான வீதியில் தென்னேகும்புர பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், முச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணும் சாரதியுமே காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 12

கொழும்பு - ஹோமாகம மாற்று வீதியில் காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் இந்த சடலத்தை நுகேகொடை குற்றப் புலனாய்வு பொலிஸார் மீட்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் தொடர்பில் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் வயது 35 இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், இளைஞரை வேறிடத்தில் கொன்றுவிட்டு சடலத்தை அந்தப் பகுதியில் போட்டுச் சென்றிருக்கலாம் என்றும் கூறினர்.

இளைஞனின் தலையில் வெட்டுக் காயங்களும் கழுத்து நெரிக்கப்பட்டும் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டதுடன், ஆள்நடமாட்டம் குறைந்த ஹோமாகம மாற்று வீதியில் இந்த சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் திருவிழாவின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊர்வலத்தின்போது...!

# சிறுமி வன்புணர்வு இளைஞர் கைதானார்!

கொழும்பு, ஜூலை 12

12 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

மொனராகலை - சியம்பலாண்டுவ பொலிஸாரால் 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுமியின் தாயின் இரண்டாவது கணவரின் சகோதரன் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுமி தனது ஆசிரியரிடம் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலேயே பாடசாலை அதிபர் மூலமாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து சந்தேகநபரான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சியம்பலாண்டுவ ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# மோட்டார் சைக்கிள் விபத்து பெண் பலி ஒருவர் படுகாயம்:

கொழும்பு, ஜூலை 12

மோட்டார் சைக்கிளில் சென்றபோது விழுந்த பொதியை எடுப்பதற்காக பின்னோக்கி நகர்ந்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

பாணந்துறை - இரத்தினபுரி வீதியில் களுத்துறை, போருவதண்ட பிரதேசத்தில் புதன் கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் இங்கிரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதில், பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவர் கிரிஎல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஆவார்.

இந்த விபத்து தொடர்பில் இங்கிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாகிஸ்தானில் மோசடி இலங்கையர்களும் கைது!

கொழும்பு, ஜூலை 12

பாகிஸ்தானில் நடந்த மோசடி சம்பவம் தொடர்பில் இலங்கையர்கள் உட்பட 149 பேரை கைது செய்துள்ளதாக அந்த நாட்டின் சைபர் குற்றப் புலனாய்வு பிரிவு அறிவித்துள்ளது.

பைசலாபாத் நகரில் செயல்பட்ட மோசடி வலைப்பின்னல் குறித்து கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மையம் போலி முதலீடுகள் என்ற பெயரில் மக்களை ஏமாற்றி ஏராளமான பணத்தை வைப்பிடச் செய்து ஏமாற்றியுள்ளது. இவ்வாறு கைதானவர்களில் இலங்கையர் இருவர், பாகிஸ்தானியர் 78, சீனர்கள் 48, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், மியான்மர், சிம்பாப்வே நாட்டவர்களும் அடங்குவர். கைதானவர்களில் 18 பேர் பெண்களாவர்.

கைதானவர்கள் நீதிமன்றின் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தலுக்கு துணைபோவதாக ஆர்ப்பாட்டம்

## கடற்படையை கண்டித்து புத்தளத்தில் நடந்தது

சிலாபம், ஜூலை 12

**போதைப்பொருள் கடத்தலுக்கு கடற்படையும் பொலிஸாரும் ஆதரவு வழங்குகின்றனர் என்று கூறி மக்கள் புத்தளத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

புத்தளம் - கற்பிட்டி - தளுவ கிராம மக்களே இவ்வாறு நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தம்மை கடற்படையினர் என்று அறிமுகம் செய்த இருவர் கிராமவாசி ஒருவரை தாக்கினர் என்றும் மக்கள் குற்றஞ் சாட்டியிருந்தனர்.

இதனிடையே, ஆர்ப்பாட்டத்தின் போது, கடற்படையை சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப் படும் சிவில் உடையணிந்த இருவர் வந்து அதை வீடியோ பதிவு செய்தமையால் அங்கு பதற்றமான சூழல் உருவானது.

இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட இடத்துக்கு வந்த நுரைச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் - என்று உறுதியளித்தார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை கடற்படையினர் மறுத்துள்ளனர். (ஐ)

# பாடப்புத்தக நிபுணர்களை நம்பியதால் ஏற்பட்ட விளைவு

## அமெரிக்கா 30வீத வரி குறித்து சஜித்

கொழும்பு, ஜூலை 11

அரசாங்கம் வெறுமனே பாடப்புத்தக நிபுணர்களை மாத்திரமே நம்பியிருப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளுக்கு அமெரிக்கா இலங்கை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் சிறந்த உதாரணமாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 சதவீத வரியை நிர்ணயித்து வெள்ளை மாளிகையிலிருந்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகளுக்கு குறைந்த வரிகளை நிர்ணயிக்க இலங்கை தவறியதற்கு பலவீனமான மற்றும் திறனற்ற பேச்சுகளே காரணமாகும். இலங்கை ஏற்றுமதிகள் மீது 30 சதவீத அமெரிக்க வரி என்பது இந்த அரசாங்கத்தின் திறனற்ற பேச்சுகளுக்கு நாம் செலுத்தும் விலையாகும்.

இந்த விவகாரத்தில் நட்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி முன்னெடுக்கப்படாமைக்கான காரணம் அரசாங்கத்தின் உதாசீனமான நடவடிக்கைகளே ஆகும். இதனால் தற்போதுள்ள 300 கோடி டொலர் ஏற்றுமதி வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெறுமனே பாடப்புத்தக நிபுணர்களை மாத்திரமே நம்பியிருப்பதால் ஏற்பட்டுள்ள ஆபத்து அமெரிக்கா இலங்கை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் சிறந்த உதாரணமாகும் - என்றும் கூறினார். (ஐ)

# வரலாற்று பாரம்பரியத்துடனான நாட்டை கட்டியெழுப்புவோம்!

## ஜனாதிபதி அநுர குமார



கொழும்பு, ஜூலை 12

வரலாற்று பாரம்பரியத்துடன் இயல்பான உறவு இல்லாமல் ஒரு சமூகமாக முன்னேறுவது சாத்தியமில்லை. அதற்கேற்ப நாட்டின் அபிவிருத்தி பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ருஹுனு கதிர்காமம் புனிதஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஒரு நாட்டை அதன் வரலாற்று பாரம்பரியத்தின் அடிப்படையில் மாத்திரமே முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்.

உலகில் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் ஒவ்வொரு நாடும் அதன் வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாப்பதுடன் அதன் மீது கட்டியெழுப்புவதன் மூலமே அந்த வளர்ச்சியை அடைய எதிர்பார்க்கிறது. ஒரு நாடாக, நாமும் நமது வரலாற்று பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்திப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நமது சமூகத்தை ஒரு கலாசார சமூகமாக மாற்ற பௌத்த மதம் உதவியது. பௌதிக வளங்களை முழுமைப்படுத்த முயற்சிக்கும் சமூகத்தில் மறைந்து வரும் சமூக மதிப்புகள் மற்றும் பண்புகள் மீண்டும் மீட்சிபெற இவ்வாறான கலாசார நிகழ்வுகள் வாய்ப்பளிக்கின்றன என்றும் ஜனாதிபதி கூறினார்.

2,186 வருடங்களாக இந்த ருஹுனு கதிர்காம ஊர்வலம் சுமார் நூறு தலைமுறையாக நடைபெற்று வருவதுடன், இந்த கலாசார நிகழ்வுக்கும் மக்களின் வாழ்வியலுக்கும் உள்ள தொடர்பு காரணமாகவே இந்த ஊர்வலத்தை நடத்துவது சாத்தியமாகியுள்ளது என்றும் கூறினார். (ஐ)

# பெண்ணிடம் தகாத வார்த்தை சாரதி கைது!

கொழும்பு, ஜூலை 12

கொழும்பில் பெண் பயணியிடம் தகாத வார்த்தைகளை பயன்படுத்தினார் என்று கூறப்படும் முச்சக்கர வண்டி சாரதி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண் சட்டத்தரணி ஒருவர் கடந்த வாரம் குறித்த முச்சக்கர வண்டியை வாடகைக்கு செயலி ஒன்றின் மூலம் அழைத்துள்ளார். ஆனால், முச்சக்கர வண்டியின் சாரதி செயலியில் குறிப்பிடாத கைபேசி இலக்கம் மூலம் அந்தப் பெண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இதனால், குறித்த சட்டத்தரணி அந்த முச்சக்கர வண்டியை தவிர்த்து வேறு ஒரு முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளார். இதனால், கோபமடைந்த முச்சக்கர வண்டி சாரதி அந்தப் பெண்ணை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதையடுத்து சட்டத்தரணி அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் முச்சக்கர வண்டி சாரதியை மாளிகாவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# போதைப்பொருளுடன் நால்வர் கைதாகினர்!

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப் பொருட்களுடன் சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கல்கிசை பொலிஸ்பிரிவில் இரத்மலானை ரயில் நிலையம் அருகே நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 20 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 29 வயது நபர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு - வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் பண்டாரநாயக்க மாவத்தையில் 10 கிராம் 170 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 45 வயது நபர் கைதானார்.

தெமட்டகொடை பகுதியில் 51 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 24 வயது நபரும் வெல்லம்பிட்டியில் 5 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 25 வயது நபரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் கொழும்பில் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 12

ஹெரோயின் மற்றும் போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கிராண்ட்பாஸ் - ஒருகொடவத்த பகுதியில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் வெல்லம்பிட்டி, கொழும்பு - 14ஐ சேர்ந்த 22, 38 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 15 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின், 25 கிராம் 370 மில்லிகிராம் ஹஷிஷ் போதைப் பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## அமெரிக்காவின் புதிய வரி

# “தொழில் பாதுகாப்பு பிரச்னை பெரியளவில் ஏற்படுத்தாது!”

கொழும்பு, ஜூலை 12

அமெரிக்கா அறிவித்துள்ள புதிய வரி நிலைமை தொழில் பாதுகாப்பு பிரச்னையை பெரிதளவில் ஏற்படுத்தாது. ஆனால், புதிய முதலீட்டாளர்களை அதிகளவில் கவர வேண்டிய தேவை காணப்படுகிறது.

எனவே, அரசாங்கம் அதற்குரிய துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் தம்மிக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட 44 சதவீத வரி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கடும் நெருக்கடிகளை எதிர் கொள்ள நேரிட்டிருக்கும். எவ்வாறிருப்பினும் தற்போது அது 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் இலங்கைக்கு உள்ள போட்டி நிலைமை உயர்வடைந்துள்ளது. எனினும், சிறியளவில் ஏற்றுமதி வருமானத்தில் சரிவு ஏற்படக்கூடும்.

புதிய நிலவரத்தின் அடிப்படையில் தொழில் பாதுகாப்பு பிரச்னை பெரியளவில் ஏற்படாது. ஆனால், புதிய முதலீட்டாளர்களை அதிகளவில் கவர வேண்டிய தேவை காணப்படுகிறது.

எனவே அது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியதும் அவசியமாகும். அரசாங்கம் இது தொடர்பில் நேர்மறையாக சிந்தித்து கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

# ஊழியர் கொடுப்பனவு சட்டமூலம் விவாதத்தை 22இல் நடத்த முடிவு!

கொழும்பு, ஜூலை 12

ஊழியர்களுக்கான வரவு - செலவு திட்ட நிவாரண கொடுப்பனவு (திருத்தம்) சட்டமூலம், ஊழியர்களுக்கான தேசிய குறைந்தபட்ச ஊதிய (திருத்தம்) சட்ட மூலம் ஆகிய இரண்டு சட்ட மூலங்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் (திருத்தம்) சட்டமூலம்மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் எதிர்வரும் 23 ஆம் திகதியும் இலங்கை மின்சார (திருத்தம்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் மறுநாள் 24 ஆம் திகதியும் நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரக் குழு முடிவெடுத்துள்ளது. (ஐ)

# தங்கநகைகள், டொலர்கள் திருடிய பெண் கைதானார்

கொழும்பு, ஜூலை 12

தங்க நகைகள், வெளிநாட்டு நாணயங்களை திருடிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான பெண்ணிடமிருந்து 39 இலட்சத்து 84 ஆயிரத்து 381 ரூபாய் பெறுமதியான தங்க நகைகள், கனடா, அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு - மட்டக்குளியில் வீடொன்றில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

கைதான பெண் கொழும்பு - மட்டக்குளியை சேர்ந்த 34 வயதுடையவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி குறைக்கப்பட்டமைக்கான நிபந்தனை வெளியாகவில்லை

## ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

**அமெரிக்க ஜனாதிபதியால் இலங்கைக்கு விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி ஓரளவேனும் குறைக்கப்பட்டிருப்பது தொடர்பில் மகிழ்ச்சி. அதேநேரம் வரியை குறைக்காமல் இருப்பதற்கு எந்த காரணமும் இல்லை. வரி குறைக்கப் பட்டபோதும் அதற்கான நிபந்தனைகள் என்ன என்பது தொடர் பில் இதுவரை வெளியாகவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரி வித்துள்ளார்.**


கொழும்பில் ஐ. தே. க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது நாட்டுக்கு இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான தீர்வை வரியை அதிகரிப்பதற்கு எடுத்த தீர்மானம் பொதுவாக அனைத்து நாடுகளுக்கும் மிகப்பெரும் பாதிப்பாகும். குறிப்பாக, எம் மைப் போன்ற சிறிய நாடுக ளுக்கு தாங்கிக்கொள்ள முடி யாத ஒரு விடயமாகும். என்றா லும் ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்க னவே அறிவித்த வரி அதிகரிப் பில் திருத்தம் மேற்கொண்டு தற்போது ஒவ்வொரு நாட்டுக் கும் அதிகரிக்கப்பட்ட வரி தொகையை குறிப்பிட்டு கடி தம் அனுப்பி வருகிறார். அதன் பிரகாரம் இலங்கைக்கு ஏற்க னவே அறிவிக்கப்பட்டிருந்த 44வீத தீர்வை வரி 30வீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது.

நாடு என்றவகையில் ஏற்க னவே இருந்ததைவிட தற்போது ஓரளவேனும் குறைக்கப்பட்டி ருப்பது தொடர்பில் மகிழ்ச்சிய டைகிறேன். ஏனெனில், எமது நாட்டின் தேயிலையில் 20 சத வீதம் வரை அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்கிறோம். இதே போன்று எமது நாட்டின் ஆடை உற்பத்தியில் அதிக வீதம் அமெரிக்காவுக்கே ஏற்று மதி செய்கிறோம். எனினும், இந்த வரி குறைப்புடன் இருக் கும் நிபந்தனைகள் என்ன என் பது தொடர்பில் எங்களுக்கு தெரியாது. அது இன்னும் வெளியாகவில்லை.

அன்று இந்த நாடு வங்கு ரோத்து அடைந்தது. வங்கு ரோத்து அடைந்த நாட்டை ரணில் பொறுப்பேற்று, கடன் மறுசீரமைப்பை செய்தார். நாட்டின் நிதி நடவடிக்கை களை முறையாக பேணி வந்ததால் எங்களுக்கு இந்த வரியை குறைத்து வழங்காமல் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. எனினும், இது ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகம் எடுத்த தீர்மானமாகும் என்றாலும் இன்னும் பல நாடுகளுக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்படவில்லை. அதனால் ஏனைய நாடுகளுக்கும் இந்த வரி அதிகரிப்பு வழங்கப்பட்ட பின்னரே இதுதொடர்பில் சரி யான ஒரு கருத்தை தெரி விக்க முடியும். இருந்தபோதும் தற் போது எமக்கு வரி குறைக்கப் பட்டிருப்பது தொடர்பில் மகிழ்ச் சியடைய முடியும் - என்றார்.

# மருந்து, சிகிச்சை உபகரணங்கள் வழங்க அமெரிக்கா இணக்கம்!



கொழும்பு, ஜூலை 12

அமெரிக்க நன்கொடை யாளர்களிடமிருந்து குறிப்பிட் டளவு அத்தியாவசிய மருந்து கள், அறுவை சிகிச்சை உபகர ணங்களை இலங்கைக்கு வழங்க இலங்கைக்கான அமெரிக்க தூ துவர் ஜூலி சங் ஒப்புக்கொண் டுள்ளார்.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், அரசாங்க மருத்துவமனைகளில் ஏற்படும் மருந்துகளின் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கான விசேட திட் டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

அரசாங்கங்களுக்கு இடை யிலான கலந்துரையாடல்கள் மூலம் நாட்டுக்கு அத்தியாவ சிய மருந்துகளைப் பெற விசேட திட்டம் செயல்படுத்தப்பட் டுள்ளது என்றும் அமைச்சர் நளிந்த தெரிவித்தார். (ஐ)

# “சர்வதேசத்தை புரிந்துகொள்ளும் தலைவர்களே நாட்டுக்கு தேவை”



கொழும்பு, ஜூலை 12

சர்வதேச நடத்தையை முன் கூட்டியே புரிந்துகொள்ளக் கூடிய தலைவர்கள் நாட்டுக்குத் தேவை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபே வர்த்தன தெரிவித்துள்ளார்.

யக்கலமுல்லையில் விகாரை ஒன்றின் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அமெரிக்காவின் வரி 44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்ட தைப் பற்றி பலர் இப்போது பேசுகின்றனர். இதுபோன்ற பேச்சுகளுக்கு அவர்கள் வெட் கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க இதுபோன்ற உலகளா விய அரசியல் நடத்தையை முன்கூட்டியே எதிர்பார்த்திருந் தார். ஆனால், அவர் அந்தப் பயணத்தை நாசப்படுத்தினார். ரணிலின் பயணத்தை மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பிரச்னைகளைத் தீர்க்கக்கூ டியவர்களை நீக்குவதன் மூலம் மக்கள் இன்று துன்பப்படுகிறார் கள் - என்றார். (ஐ)

# எசல பௌர்ணமி தினத்தன்று 7,067 தான சாலைகள் சோதனை



கொழும்பு, ஜூலை 12

எசல பௌர்ணமி (நேற்று முன்தினம்) தினத்தை முன் னிட்டு நாடு முழுவதும் 7 ஆயி ரத்து 67 தானசாலைகள் பொது சுகாதார பரிசோதகர்களால் பரி சோதிக்கப்பட்டுள்ளன என்று பொது சுகாதார பரிசோதகர் கள் ஒன்றியத்தின் செயலாளர் சாமில் முத்துக்குட தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர்,

சுகாதார சீர்கேடுடன் காணப்பட்ட 107 தானசாலை கள் சம்பந்தப்பட்ட இடத்தி லேயே சீரமைக்கப்பட்ட பின்னர் அவரை தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட்டது.

இதுவரை எந்தவொரு தான சாலையும் இயங்குவதற்கு தடை செய்யப்படவில்லை. குறிப்பாக, தற்காலிக உணவுக் கூடங்கள் மற்றும் எசல மண் டபங்களில் இயங்கும் தான சாலைகள் மீதும் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த முயற்சி, சமய மற்றும் கலாசார நிகழ்வுகளின் போது உணவுப் பாதுகாப்பும், பொது சுகாதாரமும் உறுதி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்ப டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமம் விபத்தில் சிறுவன் பலி

கொழும்பு, ஜூலை 12

கதிர்காமத்தில் முச்சக்கர வண்டியும் லொறியும் மோதி இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார். அவரின் பெற்றோரும் சகோதரனும் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கதிர்காமம் - கோனகங்கார பகுதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

அதில், ஓட்டோவில் பயணித்த கணவன், மனைவி மற்றும் அவர்களின் பிள்ளைக ளான இரு சிறுவர்கள் காயம டைந்தனர்.

விபத்தில் காயம டைந்த 15 வயது சிறுவன் மருத் துவமனை யில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மற்றைய மூவரும் கதிர்கா மம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துடன் தொடர்பு டைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கெஹலியமீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 12

தரமற்ற மனித இம்யூனோ குளோபுளின் மருந்துகளை இறக் குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 11 பேர் மீதான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதிக்கு ஒத்த வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ட்ரயல் அட்பார் இந்த உத்தரவை பிறப்பித்துள் ளது. (ஐ)

# சத்தாரத்ன தேரரை உளவியல் மதிப்பீட்டுக்கு உட்படுத்த பணிப்பு

கொழும்பு, ஜூலை 12

ராஜாங்கனை சத்தாரத்ன தேரரை உளவியல் மதிப் பீட்டுக்கு உட்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

கொழும்பு தேசிய மருத் துவமனையில் பிக்குவை பரி சோதனைக்கு உட்படுத்தி இது தொடர்பில் அறிக்கை சமர்ப் பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் துறைக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பிக்குவின் யூ-ரியூப் சனலில் வெளியிடப்பட்ட வீடியோவில் ஏதேனும் ஆபாச மொழி உள் ளதா என்பதை ஆராயவும் இது தொடர்பாக சி. ஐ. டி. அறிக் கையை தாக்கல் செய்யவும் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

ராஜாங்கனை சத்தாரத்ன தேரர் தற்போது நிபந்தனை பிணையில் உள்ளார். அவர் ஆபாச மொழியை பயன்படுத் துவதையும் தடை செய்து பிணை நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மத சகவாழ்வுக்கு தீங்கு விளைவிக்கும், பௌத்தத்தை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்த சம்பவம் தொடர் பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்ட பின்னர், கடந்த ஆண்டு ஜூலை மாதம் அவர் பிணை யில் விடுவிக்கப்பட்டார்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், இலங்கை ராமண்ண மகா நிகா யாவின் கரக சபை, பௌத்த பிக்குகள் சங்கத்தில் இருந்து ராஜாங்கனை சத்தாரத்ன தேரரை வெளியேற்ற முடிவு செய்தது.

இதேநேரம், தேரர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட தொடர்ச்சியான சர்ச்சைக்குரிய அறிக்கைகளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இது குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றதுடன் பொது விவாதத் தையும் தூண்டியுள்ளது. (ஐ)

# மனைவிமீது கத்திக்குத்து பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூலை 12

தனது மனைவியை கத் தியால் குத்தி காயப்படுத்தினார் என்று கூறப்படும் உப பொலிஸ் பரிசோதகரான கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - கல்கிசையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்தவரும் உப பொலிஸ் பரிசோதகர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரண மாக இந்த சம்பவம் இடம்பெற் றுள்ளது. காயம டைந்த பெண் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வந்து ஆடியவர் மயங்கி விழுந்து மரணம்

## களுவங்கேணி பிரதேச ஆலயத்தில்

மட்டக்களப்பு, ஜூலை 12

**ஏறாவூர் களுவங்கேணி பிரதேசத்தில் பேச்சியம்மன் கோவிலில் இடம் பெற்ற வருடாந்த சடங்கின்போது அருள் வந்து ஆடிய ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்ததுடன் ஒருவர் மீது ஆடிய ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தியதை அடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணிக்கு இடம் பெற்றதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.**

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணி சிங்காரதோப்பு கிராமத்தில் உள்ள பேச்சியம்மன் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் சடங்கு வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இதன் போது பக்தர்கள் ஆலயத்தினுள் ஆடிக் கொண்டிருந்தபோது 37 வயதுடைய நிமலன் என்பவர் திடீரென மயங்கி விழுந்ததை அடுத்து அவர் அங்கு உயிரிழந்தார். இதையடுத்து அங்கு ஆடிக் கொண்டிருந்த ஒருவர் மீது இன்னொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டார். தாக்குதலை மேற்கொண்டவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# சிறப்பாக நடைபெற்ற குருபூர்ணிமா தினம்

மட்டக்களப்பு, ஜூலை 12

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு கல்லடி இ.கி. மிஷன் குருகுலம் ஏற்பாடு செய்த குரு பூர்ணிமா தின நிகழ்வுகள் இராமகிருஷ்ண திருக்கோவிலில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை முதல் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வு இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்சராத்மானந்தா ஜீ மகராஜ் வழிகாட்டலில் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜி மகராஜ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சுவாமி உமாதீசானந்தா ஜீ ஆகியோருடன் மிஷன் பழைய மாணவர்கள் அபிமானிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்த மிஷன் மாணவ மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர். (அ)



# அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரி பதிவாளருக்கு சேவை நலன் பாராட்டு

மட்டக்களப்பு, ஜூலை 12

கடந்த 35 வருட காலம் அரச சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியின் பதிவாளர் முஸ்தபா ஜிப்ரியின் சேவையினை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் உத்தியோகத்தர் அமைப்பின் தலைவர் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.புஷ்பராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பிரதம அதிதியாக கல்விக் கல்லூரியின் பீடாதிபதி எம்.சீ.ஜூனையிட் கலந்து கொண்டார்.

இதன்போது பதிவாளர் பொன்னாடை போத்தி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், அவரின் கடந்த கால சேவை தொடர்பிலும் விசேட சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நிதி மற்றும் நிருவாகத்திற்கு பொறுப்பான உப பீடாதிபதி எம்.ஐ. ஜவ்பர் மௌலவி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# காரைதீவு தவிசாளரை சந்தித்து பேசிய மாளிகைக்காடு பள்ளிவாசல் சமூகம்




அம்பாறை, ஜூலை 12

மாளிகைக்காடு பிரதேச மக்களின் பிரச்சினைகளை ஆராய மாளிகைக்காடு மக்களின் சார்பில் மாளிகைக்காடு தலைமை ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்களுக்கும் காரைதீவு பிரதேச சபை தவிசாளருக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன் தினம் காரைதீவு பிரதேச சபையில் இடம்பெற்றது.

மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் செயலாளர் நூருல் ஹுதா உமரின் நெறிப்படுத்தலில் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ. பௌசர் தலைமையில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் பாஸ்கரனை சந்தித்த மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள் மாளிகைக்காடு மையவாடி புனரமைப்பு, மின்விளக்கு பொருத்துவது மற்றும் திருத்துதல், திண்மக்கழிவு முகாமைத்துவம், சமூக நல்லிணக்கம் தொடர்பில் கலந்துரையாடினர். இதன்போது காரைதீவு பிரதேச சபை எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் காரைதீவு பிரதேச சபை உபதவிசாளர் எம்.எச்.எம். இஸ்மாயில், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் உதவித் தலைவரும், முன்னாள் உப தவிசாளருமான ஏ.எம். ஜாஹீர், பிரதேச சபை உறுப்பினர் எம்.என்.எம்.ரணீஸ், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் ஆலோசகர் எம்.ஐ. இஸ்திகார், பொருளாளர் எம்.எப்.எம். றிபாஸ், முன்னாள் உப தலைவர் யூ.எல். செய்னுலாப்தீன், நம்பிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். (அ)

# 80ஆவது ஆண்டு நிறைவு விழா!



மட்டக்களப்பு, ஜூலை 12

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் 80ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி கடந்த அண்மையில் இடம் பெற்றது.

இந்த நடைபவனி பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமாகி, தன்னாமுனை புனித ஜோசப் கல்லூரியியைச் சென்றடைந்து அங்கிருந்து ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் வரை சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மரணமடைந்த மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்களை நினைவுகூரல், அமுதவிழா கேக் வெட்டுதல், வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர், முன்னாள் அதிபர் கௌரவிப்பு, க.பொ.த சாதாரணதரம் மற்றும் க.பொ.த உயர்தரத்தில் தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பும் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# திராய்க்கேணி மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிகள் வழங்கல்

அம்பாறை, ஜூலை 12


ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம்( ஒஸ்கார்) திருக்கோவில் வலயத்திலுள்ள மிகவும் பின் தங்கிய திராய்க்கேணி வித்தியாலய மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

"ஒஸ்கார்" அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில், ஆஸ்திரேலியாவில் வாழும் "ஒஸ்கார்" அமைப்பின் மூத்த நிர்வாக சபைஉறுப்பினர் பொறியியலாளர் வீரக் குட்டி சத்தியமூர்த்தி இத் திட்டத்திற்கு பூரண நிதியுதவி நல்கியுள்ளார்.

இந்நிகழ்வு , திராய்க்கேணி வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிபர் ஆர்.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக, ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்த ஒஸ்கார் அமைப்பின் உபதலைவர் அ.மகேந்திரன், செயலாளர் தி.லாவண்யன், பொருளாளர் வீ.விவேகானந்தமூர்த்தி ஆகியோர் சிறப்பதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.



ஒஸ்கார் சார்பில் ஒருங்கிணைப்பாளராக வீ. விவேகானந்தமூர்த்தி செயற்பட்டார்.


நிகழ்வில் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை பை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அருகில் உள்ள முன்பள்ளி பாடசாலை மாணவருக்கும் அதே உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊட்டச்சத்து மருந்துக்காக காத்திருந்த சிறார்கள் பலி



காஸா, ஜூலை 12

**மத்திய காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மருத்துவமனை முன்பாக ஊட்டச்சத்து மருந்துகளுக்காக வரிசையில் காத்திருந்த சிறுவர்கள் எண்மர், பெண்கள் இருவர் உட்பட குறைந்தது 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.**

டெய்ர் அல்- பலாவிலுள்ள அல்-அக்ஸா தியாகிகள் மருத்துவமனை வெளியிட்டுள்ள காணொலியில் பல சிறார்கள், பிறரின் உடல்கள் கீழே கிடப்பதும், மருத்துவர்கள் அவர்களின் காயங்களுக்கு சிகிச்சை வழங்குவதும் வெளிப்படுத்தப்பட்டது. ட்ரோன் மூலமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை நடத்ததும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட உதவி குழு "இந்தத் தாக்குதல் சர்வதேச சட்டத்தை அப்பட்டமாக மீறுகிறது" என்று கூறியுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் "ஹமாஸ் பயங்கரவாதியையே தாக்கினோம். பொதுமக்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் வருந்துகிறோம்", என்று தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம் குறித்து பேச்சுகள் தொடரும் நிலையில் காஸாவில் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 37 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

முன்னதாக, 2023 ஒக்ரோபர் 7ஆம் நாளன்று தெற்கு இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதன்பின்னர், காஸாமீது இஸ்ரேல் தொடுத்துள்ள போரில் 57 ஆயிரத்து 762 பேர் கொல்லப்பட்டனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், காஸாவின் பெரும்பாலான மக்கள் பல முறை இடம்பெயர்ந்துள்ளனர். 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன. உணவு, மருந்து, தண்ணீர், எரிபொருளுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# உக்ரைன் மீது 728 ட்ரோன்கள், 13 ஏவுகணைகளால் தாக்குதல்

கீவ், ஜூலை 12

உக்ரைன்மீது "ஷாஹேத்" ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தியுள்ளது. 728 ட்ரோன்கள், 13 குரூஸ் மற்றும் போலிஸ்ரிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

போலந்து, பெலாரஸ் எல்லையில் உக்ரைனின் வடமேற்கு நகரமான லுட்ஸ்க் மீதே பெரும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், 10 முக்கிய நகரங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

லுட்ஸ்க் நகரில் உக்ரைன் இராணுவ விமான நிலையங்கள் உள்ளன. ஆயுத இறக்குமதியின் முக்கிய தளமாக உள்ள இந்த இந்த விமான நிலையத்தை குறிவைத்தே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேபோன்ற மிகப் பெரிய தாக்குதலை ரஷ்யா கடந்த 4ஆம் திகதி நடத்தியிருந்தது. உக்ரைன் எல்லையின் முன்பகுதியில் சுமார் ஆயிரம் கி.மீ. தூரம் வரையில் ஆக்கிரமிப்பை விரிவுப்படுத்த ரஷ்யா தாக்குதலை தொடங்கியுள்ளது.

(ஐ)



# பாலம் இடிந்தில் 15 பேர் மரணம்!

## குஜராத்தில் துயரம்

புதுடில்லி, ஜூலை 12

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஆற்றின் பாலம் திடீரென இடிந்து விழுந்ததில் 15 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் வடோதரா மாவட்டம் பத்ரா தாலுகாவில் மஹிசாகர் ஆற்றின் குறுக்கே கம்பீரா - முஜிப்புர் பகுதிகளை இணைக்கும் பாலமே இவ்வாறு இடிந்து விழுந்தது.

நேற்று முன்தினம் பாலத்தின் ஒரு பகுதி திடீரென் இடிந்து விழுந்ததில் பல வாகனங்கள் ஆற்றில் விழுந்தன. இந்தச் சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர். ஆற்றில் விழுந்த பலர் மீட்கப்பட்டனர்.

பாலம் இடிந்து விழுந்தமைக்கான காரணம் தெரிய வரவில்லை. எனினும், தினமும் ஏராளமானவர்கள் பயன்படுத்தும் இந்தப் பாலம் நீண்டகாலமாக திருத்தப்படவோ அல்லது கண்காணிக்கப்படவோ இல்லை என்று கூறப்படுகிறது.

(ஐ)

# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்!

சியோல், ஜூலை 12

தென்கொரியாவன் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோல் கைது செய்யப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியாக யூன் சுக் இயோல் ஆட்சியிலிருந்த சமயம் கடந்த ஆண்டு டிசெம்பரில் அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சியினர், பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, ஒரே நாளில் அவசர நிலை திரும்பப் பெறப்பட்டது. இந்த நிலையில், அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் மீது தேசத் துரோக வழக்கு பதியப்பட்டு கைது செய்யப்பட்டார். 52 நாட்கள் மறியலில் வைக்கப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.




கடந்த 3ஆம் திகதி நடந்த தேர்தலில் புதிய ஜனாதிபதி லீ ஜே மியுங் தெரிவானார். இந்நிலையில், நாட்டில் அவசர நிலையை பிரகடனம் செய்தது தொடர்பான வழக்கில் சாட்சிகளை அழிக்க முன்னாள் ஜனாதிபதி முயன்றார் என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இது தொடர்பில் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் யூன் சுக் இயோல் குற்றவாளி என்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# ஆப்கானில் 6 வயது சிறுமியை திருமணம் செய்த 45 வயது நபர்

காபூல், ஜூலை 12

ஆப்கானிஸ்தானில் 45 வயது நபருக்கு, ஆறு வயது சிறுமியை திருமணம் செய்து வைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெற்கு ஆப்கானிஸ்தானின் மர்ஜா மாவட்டத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறுமியை திருமணம் செய்த 45 வயது நபருக்கு ஏற்கனவே 2 மனைவிகள் உள்ளனர். இதனிடையே சிறுமியின் திருமணத்திற்காக அந்தக் குழந்தையின் தந்தைக்கும் பணம் கொடுத்து உதவியுள்ளார். அதன்பேரில், அந்தச் சிறுமியை அவரிடம் தந்தையே விற்றுள்ளார்.

இதையடுத்து, அந்தச் சிறுமியை அவர் கட்டாயம் திருமணம் செய்துகொண்டார் என்று கூறப்படுகிறது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த தலிபான்கள் அந்தச் சிறுமியை அங்கிருந்து அழைத்துச் சென்று பெற்றோரின் வீட்டில் சேர்த்துள்ளனர்.

இதேவேளை குறித்த சிறுமிக்கு 9 வயதை அடைந்த பிறகு அவரை கணவர் வீட்டுக்கு அனுப்பலாம் எனத் தெரிவித்தனர். மேலும், சிறுமியை செய்த 45 வயது நபரையும் சிறுமியின் தந்தையையும் கைது செய்துள்ளனர்.

எனினும், சிறுமியை திருமணம் செய்த சம்பவத்துக்கு பலரும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதனிடையே,

ஆப்கானிஸ்தான் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் சிறார் திருமணம் தொடர்பான சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டுவரை ஆண்களுக்கு 18 வயதுக்குள்ளும் பெண்களுக்கு 16 வயதுக்குள்ளும் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது தலிபான்களின் ஆட்சியில் இஸ்லாமிய சட்டத்தின் பெயரால் திருமண வயது நிர்ணயிக்கப்படவில்லை. யுனிசெவ்வின் தரவுப்படி, அந்த நாட்டில் 57 வீதமான பெண்கள் 19 வயதுக்குள்ளும் 21 வீதமான பெண்கள் 15 வயதுக்குள்ளும் திருமணத்தில் இணைக்கப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பங்களாதேஷுடனான ரி - 20:

# குஷல் - நிஸங்க அதிரடி; இலங்கை அபார வெற்றி

கண்டி, ஜூலை 12

குஷல் மெண்டிஸ் - பதும் நிஸங்கவின் அதிரடியால் 7 விக்கெட்களால் வெற்றி பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது இலங்கை அணி.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இருபது - 20 தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கண்டி - பல்லேகலை மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் சரித் அசலன்க முதலில் துடுப்பாடும் வாய்ப்பை பங்களாதேஷுக்கு அளித்தார்.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு பர்வேஸ் ஹொசைன் இமோன் சிறந்த ஆரம்பத்தை வழங்கினார். வெறும் 22 பந்துகளை எதிர் கொண்ட அவர் ஒரு சிக்ஸர் மற்றும் 5 பௌண்ட்ரிகளுடன் 38 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும், அவருக்கு பின்னர் வந்த பங்களாதேஷ் வீரர்கள் குறுகிய இடைவெளிகளில் விக்கெட்களை பறிகொடுத்தனர். ஆனாலும், மொஹமட் நயீம், மெஹிதி ஹஸன் ஆகியோர் அந்த அணிக்கு நம்பிக்கை வழங்கினர். இதனால் அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.


பங்களாதேஷ் தரப்பில் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்த மொஹமட் நயீம் 29 பந்துகளில் 32 ஓட்டங்கள் பெற, மெஹிதி ஹஸன் 23 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் தீக்‌ஷன 2 விக்கெட்கள், தசூன் ஷானக, ஜெப்ரி வொண்டர்சே, நுவான் துஷார ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு குஷல் மெண்டிஸ் - பதும் நிஸங்க ஆகியோர் அதிரடியான ஆரம்பத்தை வழங்கினார்.

முதல் பவர் பிளேயில் இலங்கை அணி 83 ஓட்டங்களை குவித்தது. இது இருபது - 20 போட்டிகளில் முதல் பவர் பிளேயில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்களாகவும் மாறியது.

தொடர்ந்த ஆட்டத்தில் இலங்கை 3 விக்கெட்களை இழந்த போதிலும் குஷல் மெண்டிஸின் அரைச்சதத்துடன், 19ஆவது ஓவரில் 159 ஓட்டங்களை பெற்று வெற்றியை பதிவு செய்தது.




குஷல் மெண்டிஸ் 51 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 73 ஓட்டங்களையும் பதும் நிஸங்க 16 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் சைபுதீன், மெஹிதி ஹஸன் மற்றும் ரிசாட் ஹொசைன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை சாய்த்தனர்.

போட்டியின் நாயகனாக குஷல் மெண்டிஸ் தெரிவானார்.

(ஐ)



## ஜோ ரூட் 99 ஓட்டங்கள் இங்கிலாந்து அணி 251/4

லோர்ட்ஸ், ஜூலை 12

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் நாளில் 251 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி லோர்ட்ஸில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணிக்கு தொடக்கம் கொடுத்த கிராவ்லி, பென் டக்கெட் இணை நிதானமாக ஆடியது.

முதல் விக்கெட்டுக்கு 44 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பென் டக்கெட் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஷாக் கிராவ்லி 18 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

3ஆவது விக்கெட்டுக்காக ஒல்லி போப்புடன் ஜோ ரூட் இணைந்தார். இந்த இணை 109 ஓட்டங்களை சேர்த்த நிலையில் ஒல்லி போப் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹாரி புரூக் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து, ஜோ ரூட்டுடன் அணித்தலைவர் பென் ஸ்ரோக்ஸ் இணைந்தார். இந்த இணை கடைசிவரை விக்கெட் விழாமல் நிதானமாக ஆடியது.

பொறுப்புடன் ஆடிய ஜோ ரூட் அரைச்சதம் கடந்தார்.

நேற்றுமுன்தினம் முதல் நாள் ஆட்டம் ஆடிவில் இங்கிலாந்து 4 விக்கெட்கள் இழப்புக்கு 251 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஜோ ரூட் 99 ஓட்டங்களுடனும் பென் ஸ்ரோக்ஸ் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியா சார்பில் நிதிஷ் குமார் ரெட்டி 2 விக்கெட்டும், பும்ரா, ஜடேஜா தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமாகும்.



### விம்பிள்டன் ரென்னிஸ்:

## முதன்முறையாக இறுதிக்கு முன்னேறினார் ஸ்வியாரெக்

லண்டன், ஜூலை 12

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முதன்முறையாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளார் இகா ஸ்வியாரெக்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது அரையிறுதி சுற்றில் போலந்தின் இகா ஸ்வியாரெக், சுவற்சர்லாந்தின் பெலிண்டா பென்கிக் உடன் மோதினார்.

சிறப்பாக ஆடிய ஸ்வியாரெக் 6-2, 6-0 என்ற செற் கணக்கில் வென்று முதல் முறையாக இறுதியாட்டத்க்கு முன்னேறினார்.

இன்று நடக்கும் இறுதியாட்டத்தில் ஸ்வியாரெக் அமெரிக்காவின் அனிசிமோவாவை சந்திக்கிறார். (ஐ)

### விம்பிள்டன் ரென்னிஸ்:

## அனிசிமோவோவிடம் வீழ்ந்தார் சபலென்கா


லண்டன், ஜூலை 12

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இன்று நடக்கவுள்ள இறுதியாட்டத்துக்கு அமெரிக்காவின் அனிசிமோவோ தகுதி பெற்றுள்ளார். இவர் முதல்நிலை வீராங்கனையான சபலெங்காவை வீழ்த்தி முன்னேறியுள்ளார்.

முதல் அரையிறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான சபலென்கா, 13ஆவது நிலை வீராங்கனையான அனிசிமோவோவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை 6-4 என அனிசிமோவா கைப்பற்றினார். 2ஆவது செற்றில் சபலென்கா பதிலடி கொடுத்தார். அவர் 2ஆவது செற்றை 6-4 எனக் கைப்பற்றினார்.

வெற்றியை தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் இருவரும் கடுமையாக மோதினர். எனினும், அனிசிமோவாவின் ஆட்டத்துக்கு சபலென்காவால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் அந்த செற்றை 6 - 4 என்ற கணக்கில் அனிசிமோவா வெற்றி பெற்றார். (ஐ)





## இந்தியா - இலங்கை தொடர்களை ஓகஸ்டில் நடத்துவதற்கு திட்டம்?

கொழும்பு, ஜூலை 12

இலங்கை - இந்தியா இடையிலான ஒருநாள், ரி-20 தொடர்களை ஓகஸ்ட் நடுப்பகுதியில் நடத்துவது தொடர்பில் இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் பேச்சு நடத்துகின்றன.

ஓகஸ்டில் நடைபெறவிருந்த பங்களாதேஷ் - இந்தியா போட்டி தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதே போல, எல். பி. எல். தொடரும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால், இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை நடத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இருப்பினும், இந்திய-இலங்கை தொடர் குறித்து இதுவரை அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. எனினும், 3 ஒருநாள் போட்டி, 3 ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் விளையாடலாம் என்று கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை முடிவு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும்!

## சபையில் கூறினார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஜூலை 12

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் உரிய நேரத்தில் மக்களுக்கு விசாரணை முடிவுகள் வெளிப்படுத்தப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் நேற்று கூடியது. இதன் போது எழுப்பப்பட்ட வாய்மூல வினாவுக்கு பதிலளித்த போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021 ஆணைக்குழு அறிக்கை ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது - அதில் போதுமான தகவல்கள் உள்ளன. முந்தைய காலத்தில் விசாரணைகள் நடைபெறவில்லை என்பதற்கு நாம் எதுவும் செய்யமுடியாது. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் தான் சரியான விசாரணைகள் நடக்கின்றன.அந்த விசாரணைகளின் காரணமாகவே இந்த வாரம் நடந்த விவாதத்தில் பல புதிய உண்மைகள் வெளிப்பட்டன- என்றார்.

### வடக்கு...

எவ்வாறாயினும், 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தபோது கைப்பற்றப்பட்ட காணிகளில் 91 வீதமான காணிகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

### சர்வதேச....

செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு மக்கள் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தமிழ் மக்களாகிய நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கை தொடர்பான விடயம் ஐ. நா. மனித உரிமை பேரவையில் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டு காலம் தோறும் புதுப் புது தீர்மானங்கள் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டே செல்கிறது. இற்றைவரை இதுதீர்மானங்கள் ஊடாக குறிப்பாக வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைத்ததில்லை.

இவ்வாறாணதொரு சூழ்நிலையில் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் வருகை பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் எமது தமிழ் மக்களின் தொடர்ச்சியான பிரச்னைகளுக்கான தீர்வை வழங்கக்கூடிய ஆரோக்கியமான விடயங்கள் உள்ளடக்கப் படவில்லை என்பதை இட்டு வருத்தப்படுகிறோம்.

அத்துடன் அண்மையில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியால் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் கூட எமது மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வுக்குரிய பொறிமுறையாக அமையாத நிலையை நாங்கள் பார்க்கிறோம்.

இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வு அமையப் போவதில்லை. மாறாக சர்வதேச பொறி முறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதனை வலியுத்தி பல தடவைகள் இலங் கைக்கு உள்ளேயும், சர்வதேசத்திலும் கோரி வருகின்றோம்.

இந் நிலையில் ஐ.நா. இலங்கை தொடர்பான பிரச்னைகளுக்கு உள்ளகப் பொறிமுறைகள் ஊடாகவே தீர்வை மேற்கொள்ளவேண்டும் எனும் கருத்தை தங்களது அறிக்கைகளிலும், ஊடக நேர்காணல்களிலும் குறிப்பிடுவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கான பிரச்னைக்குரிய தீர்வு உள்நாட்டு பொறிமுறையை கடந்து சர்வதேச நீதிப் பொறி முறையின் ஊடாக கிடைக்கவேண்டும் என்பதனை மீள வலியுறுத்தி எதிர்வரும் ஜூலை 26ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய மக்கள் போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்ய எண்ணி உள்ளோம்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க அனைவரின் பங்களிப்பை வழங்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்-என்றுள்ளது. (அ)

### வேம்படி...

இவர்களுள் 120 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும் 36 மாணவர்கள் 8 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் 25 மாணவர்கள் 7 ஏ சித்திகளையும் பெற்றுள்ளதோடு தோற்றிய அனைத்து மாணவர்களும் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, யாழ். இந்துக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 82 பேர் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

73 மாணவர்கள் 8 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

33 மாணவர்கள் 7ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

24 மாணவர்கள் 6ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

20 மாணவர்கள் 5ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

345 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில், அவர்களுள் 342 பேர் சித்தியடைந்துள்ளதுடன், 232 மாணவர்கள் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். (அ)

### அமெரிக்காவின்

அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த -

உண்மையில், அமெரிக்கா விதித்த வரிகளின் தொடர்பாக பல செய்திகள் வெளிவந்தன. ஏப்ரல் 2 ஆம் திகதியில் இருந்து, உலகம் முழுவதும் வரிகள் விதிக்கப்பட்டன.

அதில் இலங்கைக்கு 44 வீத சுங்கவரி விதிக்கப்பட்டது. அதே நாளில் நாங்கள் ஒரு குழுவை நியமித்து, Zoom மூலமாக பல நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தினோம். அதன்படி, நியமிக்கப்பட்ட அரசு அதிகாரிகள் இரண்டு முறை அமெ ரிக்கா சென்று, இருதரப்பு வர்த்தக உடன்பாடுகளுக்கான வாய்ப்புகளை ஆராய்ந்தனர்.

நாம் மூன்று பில்லியன் ஏற்றுமதி செய்கிறோம். ஆனால் 300 பில்லியன் இறக்குமதி செய்கிறோம். தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தினோம். இவை நடப்பிலேயே உள்ளன.

அமெரிக்கா தனது கொள்கையின் அடிப்படையில், மூன்று மாத காலத்துக்குப் பிறகு, ஆகஸ்ட் 1 ஆம் திகதியில் இருந்து அமலுக்கு வரும் எனக் குறிப்பு விடுத்துள்ளது. 25 நாடுகளுக்கு அனுப்பப்பட்ட அவகாச கடிதங்களில், இலங்கையும் ஒன்று.

இலங்கைக்கு 44 வீதம் இருந்து 30 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை ஆகஸ்ட் 1 இற்கு முன் இல்லையெனில், இலங்கை மீதான வரி விகிதம் 30% ஆகும். நாங்கள் தொடர்ந்து இந்த கலந்துரை யாடல்களை நடத்தி மேலும் குறைக்க முயற்சிக்கிறோம்.எம்முடைய நாட்டிற்கு தான் அதிக வரி குறைப்பு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

### செம்மணி புதை குழி...

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனது விசாரணையில் 300 முதல் 400 வரையிலான தமிழ் பொதுமக்கள் அங்கு புதைக்கப்பட்டதாக வெளிப்படுத்தினார்.

இதன் பின்னர் குறித்து பகுதியில் கடந்த 1999 இல் அகழ்வாராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்போது அங்கு 15 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் இரண்டு 1996 ஆம் ஆண்டு காணாமல் போனவர்களது என அடையாளம் காணப்பட்டன. தடயவியல் உறுதிப்படுத்தல் இருந்தபோதிலும், வழக்குகள் தேக்கமடைந்தன, இன்றுவரை அதற்கு அர்த்தமுள்ள நீதி வழங்கப்படவில்லை.

2025 ஆம் ஆண்டின் முற்பகுதியில், யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி அரியாலைச் சித்துப்பாத்தி இந்துமையான புனரமைப்புப் பணிகளின் போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, இதனால் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் அந்த இடத்தை ஒரு பாரிய மனித புதைகுழியாக அறிவித்து, நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. அதன் படி தற்போதைய நிலையில், குழந்தைகள் உட்பட சுமார் 65 எலும்புக்கூடுகள் இரண்டு கட்டங்களாக தோண்டி எடுக்கப்பட்டன, அவற்றுடன் பாடசாலை பை, பொம்மை, வளையல்கள், செருப்புகள் மற்றும் துணித் துண்டுகள் போன்ற சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. அனைத்து எலும்புக்கூடுகளும் தடயவியல் பரிசோதனைக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மனித புதைகுழி அகழ்வாராய்ச்சிகள், இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை பிரசாரத்திற்கான தெளிவான சான்றுகளை காண்பிக்கின்றன.

எந்தவொரு நிலைமாறுகால நீதி செயல்முறைக்கும் உண்மையைக் கண்டறிவது அடித்தளமாக இருக்க வேண்டும். 2009 இல் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 16 ஆண்டுகளுக்கும் மேலாகியும், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை எதிர்பார்த்து காத்துள்ளனர்.

எனவே, பின்வருவனவற்றை தாமதமின்றி செயல்படுத்துமாறு நாங்கள் உங்களிடம் வலியுறுத்துகிறோம்:

1) 1999 மற்றும் 2025 ஆம் ஆண்டு புதைக்கப்பட்ட சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டவை தொடர்பான சட்ட வழக்குகளை, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றங்களின் கீழ் ஒரே நீதித்துறை மற்றும் தடயவியல் விசாரணையாக ஒருங்கிணைக்கவும்.

2) விசாரணையின் அனைத்து நிலைகளையும் மேற்பார்வையிட, தடயவியல் ஒருமைப்பாடு மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதி செய்ய, சுயாதீனமான, சர்வதேச அளவில் மதிக்கப்படும் தடயவியல் நிபுணர்களை ஈடுபடுத்துதல்.

3) அனைத்து இடைக்கால மற்றும் இறுதி தடயவியல் அறிக்கைகள், டி.என்.ஏ விவரங்கள் மற்றும் அடையாள முடிவுகளை வெளியிடுதல், மேலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், சிவில் சமூகம் மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு அணுகலை எளிதாக்குதல்.

4) நூற்றுக்கணக்கான குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்ட அன்புக்குரியவர்களைத் தொடர்ந்து தேடுகின்றனர், உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமல், நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. தேசிய ஒற்றுமைக்கு அவசியமான இந்தக் கொடூரமான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கவும்.

இலங்கையின் தார்மீக மற்றும் சட்டக் கடமைகளை நிலைநிறுத்துவதற்கும், உண்மை மற்றும் நீதியை நோக்கி நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கும் இந்த நடவடிக்கைகள் அவசியம் என்றும்

இந்த நடவடிக்கைகளை எளிதாக்குவதிலும், அவை சரியான நேரத்தில் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதிலும் ஆக்கபூர்வமாக ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றுள்ளது. (அ)

### வடக்கு கடைசி....

எண்ணிக்கையில் 73.45 வீதமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், அனைத்து பாடங்களிலும் 9 'ஏ' சித்திகளை பெற்ற 13 ஆயிரத்து 392 மாணவர்கள் உள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4.15 வீதமாகும் என கூறியுள்ளார்.

அதனடிப்படையில்
தெற்கு மாகாணத்தில் 75.64 வீதம்
மேல் மாகாணத்தில் 74.47 வீதம்
கிழக்கு மாகாணத்தில் 74.26 வீதம்
மத்திய மாகாணத்தில் 73.91 வீதம்
சப்ரகமுவ மாகாணத்தில் 73.47 வீதம்
ஊவா மாகாணத்தில் 73.14 வீதம்
வடமேல் மாகாணத்தில் 71.47 வீதம்
வட மத்திய மாகாணத்தில் 70.24 வீதம்
வடக்கு மாகாணத்தில் 69.86 வீத மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாட வாரியாக பௌத்தம் 83.21 வீதம், சைவநெறி - 82.96 வீதம், கத்தோலிக்கம் 90.22 வீதம், கிறிஸ்தவம் 91.49 வீதம், இஸ்லாம் 85.45 வீதம், ஆங்கிலம் 73.82 வீதம், சிங்கள மொழி மற்றும் இலக்கியம் 87.73 வீதம், தமிழ் மொழி மற்றும் இலக்கியம் 87.03 வீதம்

வரலாறு 82.17 வீதம், அறிவியல் 71.06 வீதம், கணிதம் 69.07 வீதம் சித்தியடைந்துள்ளனர் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்து பாடங்களிலும் சித்தி பெறாத மாணவர்களின் சதவீதம் 2.34 வீதம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### முன்னாள்...

சட்டப்பூர்வமாக மீன்வள துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மணல் அகழ்வுத் திட்டத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு சட்டவிரோதமாக ஒப்படைத்து, அரசாங்கத்திற்கு 2.63 மில்லியனுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

### போர்க்....

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது செம்மணி விவகாரம் மற்றும் படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'போர் காலத்தில் நீலன் திருச்செல்வம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்றவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதிகளவான தமிழர்களை புலிகளே கொலை செய்தனர். எமது இராணுவம் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

கொழும்பில் கொலைசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களுள் பெரும்பாலானவர்களை புலிகளே கொன்றனர். துரையப்பாவை கொன்றதும் புலிகள்தான்.

யாழில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கையை அனுமதிக்காத - சமாதானத்தை கோரிய மக்களை கொன்றதும் அவர்கள்தான்.

அரசியல் இலாபத்துக்காக அதை (செம்மணியை) பயன்படுத்தக்கூடும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாடாளுமன்றம் வந்தார். இராணுவத்துக்கு எதிராக கூட்டமைப்பினர் மற்றும் அர்ச்சுனா குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். நாமல் அதனை மறுத்தார். ஆளுங்கட்சியினர் வாய் திறக்கவில்லை. இது தவறாகும்." - என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் உற்பத்திகளும் வரியின்றி பிரித்தானியாவுக்கு!

கொழும்பு, ஜுலை 12

**பிரித்தானியா பல புதிய வர்த்தக சீர்திருத்த நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இதன் மூலம் இலங்கை உட்பட பல நாடுகளின் பொருட்கள் வரியின்றி அந்நாட்டு சந்தையை அடைய முடியும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பிரித்தானிய தூதரகத்தின் கூற்றுப்படி,இலங்கைக்கு மிகவும் குறிப்பிடத்தக்க நேர்மறையான மாற்றம் ஆடைத் துறைக்கான விதிகளை தளர்த்துவதாகும். இது இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்க ளுக்கு பயனளிக்கும். அத்துடன், அவர்கள் சந்தையை எளிதாக அணுக முடியும்.

பொதுவாக, வரி தளர்வு இலங்கை மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களிலிருந்து தயாரிக்கப் பட்ட ஆடைகளை வரியின்றி பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்.

இந்த புதிய வர்த்தக நடவடிக் கைகள் இலங்கை பொருளாதாரத் துக்கு குறிப்பாக, ஆடைத் தொழி லுக்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கும். ஆடைத் தொழில் இலங்கைக்கு ஒரு முக்கிய ஏற்றுமதி வருமானமாகும், இது ஆயிரக்கணக் கானவர்களுக்கு வேலை வாய்ப்பு களை வழங்குகிறது.

இதேவேளை, இலங்கையிலி ருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் 30 வீத பரஸ்பர வரியை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வரிவிதிப்பு இலங்கையில் ஆடை உற்பத்தியாளர்களுக்கு நெருக்க டியை ஏற்படுத்தும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 25 வீதம் அமெரிக்காவிலிருந்து கிடைப்பதாகவும், நாட்டின் ஆடைப் பொருட்களில் 70 வீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய் யப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் பிரித்தா னியா வரியின்றி அந்நாட்டு சந்தைக் குள் நுழையும் வகையில் புதிய வர்த்தக நடவடிக்கைகளை அறிவித் துள்ளது என்று கூறப்படுகிறது. (ஐ)

## அமெரிக்காவின் வரி விதிப்பால் கடலுணவு ஏற்றுமதி பாதிக்கும்!

### கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கம்

கொழும்பு, ஜுலை 12

இலங்கைமீது அமெரிக்கா விதித்துள்ள வரி பிராந் திய ஏற்றுமதியாளர்களுடன் ஒப்பிடும்போது, உள்ளூர் கடல் உணவு ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று இலங்கை கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை தமது கடல் உணவுகளில் சுமார் 25 வீதத்தை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கி றது. எனினும், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு அமெரிக்கா குறைந்த வீதத்திலான வரியை அறிவித்துள்ளதால் அது இலங்கையின் கடலு ணவு ஏற்றுமதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பிராந்திய ஏற்றுமதியாளர்களுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு இலங்கைக்கான வரியை மேலும் குறைக்க, 2025 ஒகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் பேச்சுகளில் ஈடுபட வேண்டும் - என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது. (ஐ)

## சிறுமி வன்கொடுமை; மைத்துனர் கைது!

கொழும்பு, ஜுலை 12

15 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள் ளாக்கிய மைத்துனரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி - உனவட்டுன பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட சிறுமி தனது தமக்கையின் வீட்டுக்கு சென்றிருந்தார். சம்பவ தினமான கடந்த 4ஆம் திகதி சகோதரியும் கணவரும் சந்தைக்கு சென்றுள்ளனர். சிறிது தூரம் சென்ற பின்னர் பணத்தை வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டதாகக் கூறி கணவன் வீட்டுக்கு சென்றுள்ளார்.

வீட்டுக்கு சென்றவர் அறையில் தூங்கிக் கொண்டி ருந்த மனைவியின் தங்கையான சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் சிறுமி வீட்டாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## இந்தியாவுக்காக பலியிடப்படும் நாட்டின் பொது சுகாதாரத் துறை!

### முன்னிலை சோஷலிச கட்சி




கொழும்பு, ஜுலை 12

அரச மருந்து கூட்டுத் தாபனத்தின் கொள்மு தல் செயல்முறையை நிராகரித்து, அரசாங்கம் இந்தியாவு ஸ்ரீடன் செய் துள்ள ஒப்பந்தத்தின் மூலம் மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத் துள்ளது. இது இந்தியாவின் வியாபார நோக்கத்துக்காக எமது பொது சுகாதாரத்தை பலி கொடுக்கும் நடவடிக்கை - என்று முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங் கள் மூலம் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாக மாறுவருகிறது. அதற்கு சிறந்த உதாரணத்தை மருந்துத் துறையில் கண்டுகொள்ள முடியும். நாட்டில் தற்போது நிலவும் 113 வகையான மருந்து பொருட்களை கொள்வ னவு செய்ய அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள் ளது. ஆனால், இந்த மருந்து கொள்வனவு அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் கொள்முதல் செயல்முறையை நிராகரித்து, அரசாங்கம் தலையிட்டு, நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் மருந்துபொருட் களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் மருந்து பொருட்களின் தரம் தொடர்பில் பிரச்னை இருக்கிறது - என்றார். (ஐ)

## 85 வயது மாமன்அடித்ததில் மருமகன் உயிரிழந்தார்!

ஹற்றன், ஜுலை 12

மாமானார் பொல்லால் தாக்கியதில் மருமகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். நுவரெலியா - ஹற்றன் - தெஹியோவிட்ட பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 45 வயதுடைய தினேசன் செல்வராஜ் என்பவரே உயிரிழந்தார்.

கடந்த புதன்கிழமை இரவு 85 வயதான மாமனா ருக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. இதனால், ஆத்திரமடைந்த மாமனார் மருமகனின் தலை, நெஞ்சில் பொல்லால் தாக்கியுள்ளார்.

இதில், தாக்குண்டவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவத்தையடுத்து தெஹியோவிட்ட பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர். (ஐ)

## போதைப்பொருளால் தகராறு பறிபோனது இளைஞரின் உயிர்

கொழும்பு, ஜுலை 12

போதைப் பொருள் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை கத்திக் குத்தில் முடிந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந் தார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலி - கிங்தொட்ட பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த 38 வயது நபரே உயிரிழந்தார். உயிரிழந்தவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## இலங்கைக்கே உரித்தான பலமான பொருளாதார திட்டம் அவசியம்!

### திலித் ஜயவீர கருத்து



கொழும்பு, ஜுலை 12

இலங்கையிலிருந்து இறக்குமதியாகும் சகல பொருட்களுக்கும் அமெரிக்கா விதித்துள்ள 30 சதவீத புதிய தீர்வை வரியானது இலங்கைக்கே உரித்தான உலக மட்டத்தில் பலமான - தெளிவான பொருளாதார திட்டமொன்று அவசியமாகவுள்ளது என்பதை பிரதிப லித்துள்ளது என்று சர்வஜன அதிகாரத்தின் பாராளு மன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா விதித்துள்ள 30 சதவீத வரியானது உலக நடப்புகளுடன் இலங்கைக்கு தெளிவான பொருளாதார திட்டமொன்று அவசியமாகவுள்ளது என்பதை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

அது இலங்கையின் நிலையான பயணத்துக்கு வலு வான வேராகவும் பூர்வீகத்தன் மையை கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த் துவதாகவும் அமைந்துள் ளது.

அந்தந்த தொழில்களில் எமது போட்டி நன்மைகளை நாம் அங்கீகரிக்காவிட்டால், மேற்கத்தேய உதவியை நம்பியிருக்கும் மனநிலையைத் தொடர்ந்து கொண்டி ருந்தால், எமது தேசம் அழிந்துவிடும்.

சர்வஜன அதிகாரத்தின் "இலங்கையின் மூலோபா யத் திட்டம்" வரைவில் வழங்கப்பட்ட அதிநவீன மூலோபாய பாதையை அரசாங்கம் தீவிரமாகப் படிக்க வேண்டும் என்று நான் பணிவுடன் முன்மொழிகிறேன். இந்தத் திட்டத்தின் பின்னணியிலுள்ள மையக் கருத்தை "தொழில் முனைவோர் அரசு" என்ற கருத்தை அரசாங் கம் பரிசீலிக்க வேண்டிய முக்கியமான நேரம் இது - என் றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## தினசரி 103 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்!

கொழும்பு, ஜுலை 12

நாட்டில் ஒவ்வொரு வருட மும் 35 ஆயிரம் முதல் 40 ஆயி ரம் வரையான புற்றுநோயாளர் கள் புதிதாக அடை யாளம் காணப்படுகிறார்கள். இதன்படி, ஒவ்வொரு நாளும் 100 - 103 புற்றுநோயாளர்கள் அடையா ளம் காணப்படுகின்றனர் என்று தேசிய புற்றுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் குடும்பநல விசேட மருத்துவ நிபுணர் துராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணிய கத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

மேலும், "நாட்டில் தற்போது மஹரகம தேசிய புற்றுநோய் தடுப்பு நிறுவனம் உள்ளிட்ட 25 புற்று நோய் தடுப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நாளாந்தம் அடையாளம் காணப்படும் புற்றுநோயா ளர்களின் தொகை ஒவ்வொரு வருடத்துடனும் ஒப்பிடும்போது மாற்றம் ஏற்படலாம். இருந்த போதும் பொதுவாக ஒவ்வொரு வருடமும் நாளொன்றுக்கு 100 முதல் 103 வரையான புற்று நோயாளர்கள் புதிதாக அடை யாளம் காணப்படுகிறார்கள்.

ஆண்கள் பெரும்பாலும் வாய்ப்புற்று நோயால் பாதிப் படைகிறார்கள். மேலும், சுவா சம், மலக்குடல் புற்றுநோய்களா லும் அதிகம் பாதிப்படைகின் றனர்.

பெண்களை பொறுத்தவரை யில் அவர்கள் அதிகம் மார்பகப் புற்றுநோயால் அதிகம் பாதிக் கப்படுகி றார்கள். வருடாந்தம் 5 ஆயிரத்து 500 பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுகின் றனர். அடுத்து, தைரொய்ட் புற் றுநோய், மூன்றாவதாக பெருங்கு டல், மலக்குடல் புற்றுநோய்களா லும் அதிகம் பாதிக்கப் படுகின் றனர்.

பெண்களுக்கும் ஆண்களுக் கும் இடையில் பெருங்கு டல், மலக்குடல் புற்றுநோய் பொது வாக உள்ளது. அடுத்த வருடங்க ளில் இந்த புற்றுநோய் ஆண்கள் மத்தி யில் பரவலடையும்- இரண் டாம் நிலை புற்றுநோயாக வும் மாறலாம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.